**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ஆம் நாள், சனிக்கிழமை

**<u>இ.ம.எண். 12/2026 இன் அ.வ.எண்.346/2011</u>**

**<u>CNR No. TNSA13-000168-2011</u>**

1. சஞ்சீவி
2. ஜெயராஜ்
3. ராஜா
4. வெள்ளையன்
5. அமுதன் (இறந்தவர்)
6. சின்னதம்பி
7. சுபா
8. அமலா
9. சூர்யா
10. மைனர் சண்முகபிரியா . . . மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

சன்னாசி . . . எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, 07.04.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சிவராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1(A) மற்றும் பிரிவு 151ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் இம்மனுவில் 1ம் மனுதாரர் என்றும், இம்மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாவில் 07.02.2026 அன்று மனுதாரர் தரப்பில் கூடுதல் நிரூபண சாட்சியமளிக்க வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் அனுபவத்தை நிரூபிக்க சில ஆவணங்கள் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், அந்த ஆவணம் தாவா சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்று நிரூபணம் செய்ய மிக அவசியமான ஆவணம் என்றும், எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். மனுதாரர்கள் இம்மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்களுக்கும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் எவ்வித உரிமையும், அனுபவமும் ஏற்படுத்தவில்லை என்றும், மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகள் பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்றும், மேற்படி ஆவணங்களுக்கும், மனுதாரர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாதபோது மனுதாரர்கள் ஒப்படைத்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனு தாக்கல் செய்திருப்பது

ஏற்கக்கூடியதல்ல என்றும், மேலும் இம்மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு அருகில் உள்ள நிலத்துக்காரரான கோவிந்தராஜ் மற்றும் பழனிவேல் ஆகியோர்களின் பெயர்களில் ஆவணங்களை தயாரித்து ஒப்படைத்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்களுக்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாததால் இம்மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்களை ஏற்க இயலாது என்றும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அடங்கல், சிட்டா, மற்றும் கந்தாய ரசீதுகள் ஆகியவற்றை தனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மாறாக எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்திற்கும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் தொடர்பில்லை என்று ஆட்சேபனை செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்/வாதிக்கு மனுவில் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பாக குறுக்கு விசாரணை செய்து கொள்ள உரிமை உண்டு என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.18 17:56:05 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.04.18 17:56:21 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ. ஆத்தூர்**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 12/2026 இன்
அ.வ. எண். 346/2011
நாள் : 18.04.2026